# ரொறன்ரோவுக்கு புதிதாக் குடிவந்தவரா?

# வருக!

## புது வரவினருக்குக் குடியேற உதவும் வளங்களும் சேவைகளும்

TORONTO 311 ஐ அழைக்க



நீங்கள் ரொறன்ரோவில் குடியேறும் போது, உங்களது இடைமாற்றத்தை எளிதாக்க உதவ ரொறன்ரோ நகரசபையினூடாகக் கிடைக்கப் பெறும் வளங்களும் சேவைகளும் பல காணப்படுகின்றன. சேவைகளில் பல இலவசமானவை அல்லது உதவியளிக்கப்படுபவை.

## உதவியளிக்கப்படும் வீட்டு வசதி

### அவசர நிலைப் புகலிடம், வீட்டு வசதி ஆதரவுகள், உதவியளிக்கப்படும் வீட்டு வசதி

பலவீனமானோருக்கு அவசர நிலைப் புகலிடத்தையும் அவர்களது தேவைகளை அடைந்து கொள்ளும் இடைமாற்று, நிரந்தர வீட்டு வசதியையும் கண்டு கொள்ள உதவுவதற்கான வீட்டு வசதி, ஆதரவுச் சேவைகள் காணப்படுகின்றன. சேவைகளில் உள்ளடங்குவன:

- வீடற்ற தனியாட்களுக்கும் குடும்பங்களுக்குமான தற்காலிகப் புகலிடமும் ஆதரவுச் சேவைகளும். உதவிக்காக 311 ஐ அழையுங்கள் அல்லது 416-397-5637 இல் அல்லது 1-877-338-3398 (GTA இனுள் கட்டமற்றது) இல் மத்திய உள்வாங்கலை (Central Intake) (நாளின் 24 மணி நேரமும்) அழையுங்கள்
- வீடற்றோருக்கு அல்லது வீடற்றோராகும் இடர்ப்பாட்டிலுள்ளோருக்கு தமது வீட்டு வசதி நிலைமைகளைக் கண்டு கொள்ளவும் உறுதிப்படுத்தவும் வீட்டு வசதி உதவியும் ஆதரவும். இதில் வீட்டு வசதியளிக்கப்பட்டுள்ள வீடற்றோருக்கான வீட்டு வசதி தேடல்கள், வெளியேற்றல் தடுப்பு, தகவல்களும் பரிந்துரைகளும், உதவியளிக்கப்படும் வீட்டு வசதிக்கான ஒரு விண்ணப்பத்தைச் செய்வதில் உதவி, தொழிலுக்கு முந்திய ஆதரவுகள், பின் தொடர் ஆதரவுகள் என்பன உள்ளடங்குகின்றன.
- நகரச சபை குறைந்த வருமானம் கொண்ட குடியிருப்பாளர்களுக்காக (ரொறன்ரோ சமுதாய வீட்டு வசதி (Toronto Community Housing) உட்பட) 94,000 அலகுகளுக்கு மேல் சமூக வீட்டு வசதியை நிருவகிப்பதுடன், ஒருங்கிணைக்கப்பட்ட சமூக வீட்டு வசதி அணுகல் முறையை முகாமை செய்கிறது.
- முதியோர், இளைஞர், பலவீனமான குடும்பங்கள் என்பன உட்பட குறிப்பான பாவனையாளர் குழுக்களுக்கென அமைக்கப்பட்ட தகவல்களை வழங்கும் சேவைகளுக்கு வழிகாட்டுகிறது. இவை யாவும் இணையவழியில் கிடைக்கப் பெறுகின்றன

இச்சேவைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் பற்றிய மேலதிகத் தகவல்களுக்காக, **toronto.ca/humanservices** இற்குச் செல்லுங்கள்

### உதவியளிக்கப்படும் வீட்டு வசதிக்கு விண்ணப்பித்தல்

உதவியளிக்கப்படும் வீட்டு வசதி அலகுகளுக்கான காத்திருப்பு நேரங்கள் மிக நீண்டவையாக இருக்கலாமாயினும், தகுதி பெறுவோர் கூடிய விரைவில் ஒரு விண்ணப்பத்தைச் செய்ய வேண்டும். செயன்முறை ஒருங்கிணைக்கப்பட்டதும் வீட்டு வசதித் தொடர்புகள் (Housing Connections) இனூடாக முகாமை செய்யப்படுவதும் ஆகும்.

மேலதிகத் தகவல்களுக்காக 416-981-6111 ஐ அழையுங்கள், 176 Elm Street இலுள்ள Housing Connections இற்கு வருகை தாருங்கள், அல்லது **housingconnections.ca** இற்குச் செல்லுங்கள்



## சுகாதாரச் சேவைகள்



**ரொறன்ரோ பொதுச் சுகாதாரம் (Toronto Public Health)** ஒரு சுகாதார அட்டை தேவைப்படாத பல இலவச நிகழ்ச்சித் திட்டங்களையும் சேவைகளையும் வழங்குகிறது. இவற்றில் உள்ளடங்குவன:

- பாடசாலைக்குச் செல்வதற்காக நிர்ப்பீடனமளிக்கப்பட வேண்டிய (4 முதல் 17 வயது வரையான) பாடசாலைப் பருவச் சிறார்களுக்கான நிர்ப்பீடனமளித்தற் சேவைகள்
- தகுதி பெறும் சிறார்களுக்கும் இளைஞர்களுக்கும், ரொறன்ரோ பொதுச் சுகாதார நிகழ்ச்சித் திட்டங்களில் சேர்ந்துள்ள வயது வந்தோருக்கும், முதியோருக்குமான பல் மருத்துவச் சேவைகள்
- கர்ப்ப கால, மகப்பேற்றுக்குப் பிந்திய, பெற்றோராதல் நிகழ்ச்சித் திட்டங்கள், ஆலோசனை, ஆதரவு என்பன
- இளஞ் சிறார்களின் பெற்றோர்களுக்கான சுகாதாரமான உணவுண்ணல் வகுப்புக்கள்
- தாய்ப்பாலூட்டற் சிகிச்சையகங்களும் ஆதரவும்
- பெண்களுக்கும் ஆண்களுக்குமான இரகசியம் பேணும் பாலியற் சுகாதாரச் சேவைகள்
- ஏனைய சுகாதாரத் தகவல், கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்

ஒரு சுகாதார நிபுணருடன் இலவசமாக உரையாட, இரகசியம் பேணும் தகவல்களுக்கும் ஆலோசனைக்கும், ஏனைய சுகாதாரச் சேவைகளுக்குப் பரிந்துரைக்க, அல்லது ரொறன்ரோ பொதுச் சுகாதார நிகழ்ச்சித் திட்டங்களில் பதிவு செய்ய 416-338-7600 ஐ அழையுங்கள், அல்லது **toronto.ca/health** இற்குச் செல்லுங்கள்.

## தொழில், நிதி உதவி

நகரசபையின் **தொழில், சமூக சேவைகள் (Employment and Social Services)** பிரிவு ரொறன்ரோவில் வதிவோருக்கு தொழில் ஆதரவுகள், நிதிப் பயன்கள், சமூக ஆதரவுகள் என்பவற்றை வழங்குகிறது.

தொழில் நிலையங்கள் ரொறன்ரோவாசிகள் யாவருக்குமாகத் திறந்திருக்கின்றன. சேவைகளில் இவற்றுக்கான உதவிகள் உள்ளடங்குகின்றன:

- ஒரு தொழிலைக் கண்டு கொள்ளல் அல்லது வேலை தேட அவசியமான உதவியைப் பெறுதல்
- சுகாதார, வீட்டு வசதி, சிறுவர் பராமரிப்பு, ஏனைய சமூக சேவைகள் என்பவற்றுடன் தொடர்பாதல்

உங்களுக்கு நிதியுதவி தேவைப்படின், நீங்கள் Ontario Works நிகழ்ச்சித் திட்டத்தினூடான நலன்களுக்குத் தகுதி பெறலாம்.

மேலதிகத் தகவல்களுக்காக, 416-392-2956 இல் வாடிக்கையாளர் சேவையும் தகவல்களும் (Client Services & Information) என்பதை அழையுங்கள், அல்லது இங்கு வருகை தாருங்கள்: **toronto.ca/humanservices**



**ரொறன்ரோ நகரசபை பல்வேறு சேவைகளை வழங்குகிறது. ரொறன்ரோ நகரசபை நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் சேவைகளுக்குமாக, 311 ஐ அழையுங்கள் அல்லது toronto.ca இற்குச் செல்லுங்கள்.**

**தகவல்கள் வெவ்வேறு மொழிகளில் வழங்கப்படுகின்றன.**




## சிறுவர் பராமரிப்பு

**ரொறன்ரோ சிறுவர் சேவைகள் (Toronto Children's Services)** உயர் தரமான முன் கற்றல், சிறுவர் பராமரிப்பு, குடும்பங்களுக்கான ஆதரவு என்பவற்றை ஊக்குவிக்கிறது. இதில் உள்ளடங்குவன:

- அமைவிடங்களையும் தர அளவீடுகளையும் வழங்கும் ஒரு சிறுவர் பராமரிப்புத் தேடு கருவி
- நிதித் தேவையுள்ள குடும்பங்களுக்கு சிறுவர் பராமரிப்புச் செலவைக் கொடுக்க உதவுதவற்கான நிதியுதவி
- விசேட தேவைகளைக் கொண்ட சிறுவர்களுக்கான சேவைகள்
- இளஞ் சிறார்களைக் கொண்ட குடும்பங்களுக்கான இலவச நிகழ்ச்சித் திட்டங்கள், விளையாட்டுக் குழுக்கள், பெற்றோராதல் நிகழ்ச்சித் திட்டங்கள், வளங்களைப் பற்றிய தகவல்கள் என்பவற்றை வழங்கும் குடும்ப ஆதரவு நிகழ்ச்சித் திட்டங்கள்

மேலதிகத் தகவல்களுக்காக, **toronto.ca/humanservices** இற்குச் செல்லுங்கள் அல்லது 311 ஐ அழையுங்கள்.

## நீண்ட காலப் பராமரிப்பு

**நீண்ட காலப் பராமரிப்பு இல்லங்களும் சேவைகளும் (Long-Term Care Homes & Services)** நகரின் நீண்ட காலப் பராமரிப்பு இல்லங்களில் வதிவோருக்கும், பின்வருவன உட்பட சமுதாயத்தில் வசிக்கும் பலவீனமான ஆட்களுக்குமான பல்வேறு நீண்ட காலப் பராமரிப்புச் சேவைகளை வழங்குகிறது:

- நிரந்தர, நலமடைதல், குறுகிய தங்கியிருப்பு அனுமதிகளை வழங்கும் நீண்ட காலப் பராமரிப்பு இல்லங்கள்
- வளர்ந்தோருக்கான பகல் நேர நிகழ்ச்சித் திட்டங்கள், உதவிகரமான வீட்டு வசதிச் சேவைகள், மனையியற் சேவைகள் என்பன உட்பட சமுதாய ஆதரவு நிகழ்ச்சித் திட்டங்கள்

தூண்டுகின்ற, சவாலான, வெகுமதியளிக்கும் தொண்டர் பதிவிகள் பலவும் காணப்படுகின்றன. நீண்ட காலப் பராமரிப்பு இல்லங்களும் சேவைகளும் என்பதைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள **toronto.ca/ltc** இற்குச் செல்லுங்கள்.

## ஒரு வணிகத்தைத் தொடங்குதல்

**எண்டர்பிறைஸ் ரொறன்ரோ (Enterprise Toronto)** ஆனது ஒரு வணிகத் தொடக்கத்தின் போது ஆட்கள் நல்ல தீர்மானங்களை மேற்கொள்ள உதவுவதுடன், அவர்களின் வணிக முயற்சிகள் வளரும் போது அவர்கள் முகாமைத்துவ ஆற்றல்களை விருத்தி செய்து கொள்ள உதவுகிறது.

மேலதிகத் தகவல்களுக்காக, **toronto.ca/enterprisetoronto** இற்குச் செல்லுங்கள்.

## குடும்ப நடவடிக்கைகள்

**ரொறன்ரோ பொது நூலகம் (Toronto Public Library)** நகரெங்கிலும் 100 இற்கு மேற்பட்ட நூலங்களைக் கொண்டிருப்பதுடன், இலவச உறுப்புரிமைகளையும் சேவைகளையும் வழங்குகிறது. அனைவரும் வரவேற்கப்படுகின்றனர், உங்களுக்கு அருகிலேயே ஒரு கிளை இருக்கிறது. கிளைகள் காலை நேரங்கள், மாலை நேரங்கள், வார இறுதிகள் என்பவற்றில் திறந்திருக்கின்றன.

பின்வருவனவற்றுக்காக உங்கள் பகுதி நூலகத்துக்குச் செல்லுங்கள்:

- பாடசாலையில் உங்களது பிள்ளைக்கு உதவுதல்
- உங்களது பிள்ளையை கதை கூறல் நேரத்துக்கு கொண்டு வருதல்
- உங்களது ஆங்கில அறிவை மேம்படுத்துதல்
- ஒரு வேலையைத் தேடிக் கொள்வதில் அல்லது ஒரு சிறு வணிகத்தைத் தொடங்குவதில் உதவி பெறுதல்
- ஒரு கணனியை அல்லது WIFI ஐப் பாவித்தல்
- வேலை செய்ய அல்லது படிக்க ஓர் அமைதியான, பாதுகாப்பான இடத்தைக் கண்டு கொள்ளல்
- உங்களது சமுதாயத்தைச் சேர்ந்தோரைச் சந்தித்தல்
- பல்வேறு மொழிகளில் டீவீடீக்களையும் நூல்களையும் இரவல் பெறுதல்
- உங்களது புதிய வாழிடமான ரொறன்ரோவைப் பற்றி அறிந்து கொள்ளல்

மேலதிகத் தகவல்களுக்கு 416-393-7131 இல் எம்மை அழையுங்கள், அல்லது **torontopubliclibrary.ca** இற்குச் செல்லுங்கள்.



**பூங்காக்கள், காடு வளர்ப்பு, கேளிக்கை (Parks, Forestry and Recreation)** நகரெங்கிலும் பல்வேறு சேவைகளை வழங்குகிறது. நீங்கள் செய்யக்கூடியவை:

- ரொறன்ரோவிலுள்ள பல சனசமூக நிலையங்களில் ஒன்றில் நடவடிக்கைகளை அனுபவித்தல்
- புதிய நண்பர்களைப் பெறுதல், புதிய திறமைகளைக் கற்றுக் கொள்ளல் அல்லது ஏற்கனவே இருப்பவற்றை மேம்படுத்துதல். உங்களது நிகழ்ச்சித் திட்ட வழியின் ஒவ்வொரு படித்தரத்திலும் தகுதி வாய்ந்த, பராமரிக்கும் ஊழியர்கள் உங்களுக்கு வழி காட்டுவர்
- எல்லா வயதினருக்குமான உல்லாசமான நிகழ்ச்சித் திட்டங்கள் பலவற்றில் பங்குபற்றுங்கள். நீங்கள் நீந்துதல், உடற்கட்டு, பனி வழுக்கு, பனிச் சறுக்கு, கலைகளும் கைவினைகளும் அல்லது நடனம் என எதை அனுபவித்தாலும், ஒவ்வொருவருக்கும் எம்மிடம் ஏதேனுமிருக்கிறது.



### இலவச கேளிக்கை நிகழ்ச்சித் திட்டங்கள்

சனசமூக நிலையங்கள் சனத்தொகையின் குறிப்பிடத் தக்க தொகையினர் குறைந்த வருமானம் கொண்டோராயிருக்கும் குறிப்பான அமைவிடங்கலில் இலவச நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குகின்றன.

### வரவேற்புக் கொள்கை (Welcome Policy)

ரொறன்ரோ நகரசபையின் வரவேற்புக் கொள்கை குறைந்த வருமானம் கொண்ட ஆட்களுக்கும் குடும்பங்களுக்கும் உதவ ஒரு கட்டண உதவித் தொகையை வழங்குகிறது.

மேலதிகத் தகவல்களுக்கு 416-338-4386 ஐ அழையுங்கள், அல்லது **toronto.ca/parks** இற்குச் செல்லுங்கள்.

## ஏனைய சேவைகள்

**அவசர நிலைச் சேவைகள்**
(மருத்துவ ஊர்தி/தீயணைப்பு/பொலிஸ்)
**அழைப்பு: 911**

**சமுதாயச் சேவைகள்**
**பரிந்துரையும் தகவல்களும் (Referral and information), அழைப்பு: 211**

**ரொறன்ரோ போக்குவரத்து ஆணையகம்**
**(Toronto Transit Commission) (TTC)**
**416-393-INFO (4636)**

**போக்குவரத்து**
**toronto.ca/transportation**

**குப்பையும் மீள்சுழற்சியும்**
**toronto.ca/garbage**

**ரொறன்ரோ நீர் (Toronto Water)**
**toronto.ca/water**

**குடிவரவு, குடியிருப்பு வலைவாசல்**
**(Immigration and Settlement Portal)**
**toronto.ca/immigration**

பெரும்பாலான சேவைகள் இலவசமானவை, அத்துடன் அவ்வாறில்லாதவற்றுக்கு உதவித் தொகைகள் கிடைக்கப் பெறுகின்றன. இவற்றையும் வேறு பல சேவைகளையும் பற்றிய விபரங்களுக்காக 311 ஐ அழையுங்கள்.

இச்சிற்றேட்டின் விருத்திக்கு ரொறன்ரோ புது வரவினர் அலுவலகத்தால் (Toronto Newcomer Office), ரொறன்ரோ நகரசபைப் பிரிவுகள் பலவற்றின் பங்குபற்றலுடன் வசதி செய்யப்பட்டதுடன், கனடா குடிவரவு, அகதிகள், குடியுரிமை (Immigration, Refugees and Citizenship Canada) இனால் நிதியளிக்கப்பட்டது. மேலதிகத் தகவல்களுக்காக, **toronto.ca/newcomer** இற்குச் செல்லுங்கள்.

Funded by: Immigration, Refugees and Citizenship Canada

Financé par : Immigration, Réfugiés et Citoyenneté Canada